**செய்தி வெளியீடு எண்.841** **நாள்.7.10.2008**

பத்திரிகைச் செய்தி

**தமிழ் நாட்டிற்கென புதிய "ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை 2008" வகுப்பது தொடர்பாக மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை ) அவர்களின் தலைமையில் கலந்தாய்வுக் கூட்டம் 7-10-2008 அன்று முற்பகல் 11.00 மணியளவில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. மேற்கண்ட கலந்தாய்வுக் கூட்டத்தில் திரு. விஷ்வநாத் ஷெகாவ்கர், செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, திருமதி ஆர். ஜெயா, கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், திருமதி எம்.பி. நிர்மலா, மேலாண்மை இயக்குநர், கோஆப்டெக்ஸ் மற்றும் துறையின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.**

**2. இக்கூட்டத்தில் , தென்னிந்திய ஆலைகளின் சங்கத் தலைவர் மற்றும் பிரதிநிதிகள், திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்க பிரதிநிதிகள், விசைத்தறியாளர்களின் பிரதிநிதிகள் மற்றும் ஜவுளித் தொழிலுக்கு தொடர்புடைய பல்வேறு துறையின் வல்லுநர்கள், மத்திய அரசின் நெசவாளர் சேவை மைய இயக்குநர் ஆகியோர் கலந்து கொண்டு ஜவுளித் தொழிலின் வளர்ச்சிக்காகவும் ஜவுளிக் கொள்கை வகுப்பது தொடர்பாகவும் பல்வேறு கருத்துக்களை தெரிவித்தனர்.**

**3. அனைவரின் கருத்துக்களின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை வகுக்கப்பட்டு, விரைவில் அரசால் வெளியிடப்படும் என மாண்புமிகு அமைச்சர் (பிற்பட்டோர் நலன் மற்றும் கைத்தறி (ம) துணிநூல்) அவர்கள் தெரிவித்தார்கள்.**

**இக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் விபரம்**

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | அமைப்பு/துறை |
|---|---|---|
| 1 | திரு. விஷ்வநாத் ஷெகாவ்கர், இ.ஆ.ப<br>அரசுச் செயலாளர் | கைத்தறி,<br>கைத்திறன்,துணிநூல் மற்றம் கதர் துறை, |
| 2 | திருமதி. ஆர். ஜெயா, இ.ஆ.ப<br>இயக்குநர் | கைத்தறி மற்றும் துணிநூல் துறை |
| 3 | திருமதி எம்.பி. நிர்மலா, இ.ஆ.ப.<br>மேலாண்மை இயக்குநர் | கோ-ஆப்டெக்ஸ் |
| 4 | திரு. கே.வி. சீனிவாசன்,<br>தலைவர் | தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம், (சைமா) கோவை |
| 5. | திரு. ஜெ, துளசிதரன்<br>துணைத் தலைவர் | தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம், (சைமா) கோவை |
| 6 | டாக்டர் கே. செல்வராசு<br>செயலர் | தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம், (சைமா) கோவை |

| | | |
|---|---|---|
| | | |
| 7 | திரு. ட்டி. கண்ணன்,<br>முன்னாள் தலைவர் | தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம், (சைமா) கோவை |
| 8 | திரு. மாணிக்கம் இராமசாமி,<br>முன்னாள் தலைவர் | தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம், |
| 9. | திரு. எம். எஸ். மதிவாணன்,<br>தலைவர் | தமிழ்நாடு விசைத்தறியாளர்கள் இணையம், குமாரபாளையம் |
| 10 | திரு. கே.என். விஸ்வநாதன்,<br>கௌரவச் செயலாளர் | தென்னிந்திய பருத்தி சங்கம், கோவை |
| 11 | திரு. எம். செந்தில்குமார்,<br>முன்னாள் தலைவர் | விசைத்தறி ஏற்றுமதி அபிவிருத்தி கழகம், குமாரபாளையம் |
| 12 | திரு. எம். சிவக்கண்ணன்,<br>மேலாண்மை இயக்குநர் | கரூர் . ஜவுளிப் பூங்கா, கரூர் |
| 13. | திரு. ஜ, கார்த்திகேயன்,<br>பொதுச் செயலாளர் | திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம், திருப்பூர் |
| 15 | திரு. கே. ரங்கராஜன்,<br>துணைத் தலைவர் | தென்னிந்திய சிறு நூற்பாலைகளின் சங்கம், கோவை |
| 16. | திரு. பி.பி. பால்,<br>இயக்குநர் (தென் மண்டலம்) | நெசவாளர் சேவை மையம், மத்திய அரசு, சென்னை |
| 17 | திரு. டி. முத்தையா,<br>இணை இயக்குநர், | பட்டு வளர்ச்சித் துறை, சேலம் |
| 18 | திரு. ஏ.சி. தாணுப்பிள்ளை,<br>இணை இயக்குநர்/மேலாண்மை இயக்குநர் | தமிழ்நாடு கூட்டுறவு பட்டு இணையம்(டான்சில்க்) காஞ்சிபுரம் |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**